தாக்கல் இன்றுடன் முடிகிறது. மக்களவைத் தேர்தலில் போட்டியிட மு.தம்பிதுரை, கனிமொழி, தமிழிசை, ஆ.ராசா, சு.திருநாவுக்கரசர், ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் உள்ளிட்ட அதிமுக, திமுக கூட்டணியில் உள்ள முக்கிய வேட்பாளர்கள் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தனர்.

தமிழகம், புதுச்சேரியில் மக்களவைத் தேர்தல் வரும் ஏப்ரல் 18-ம் தேதி நடக்கிறது. இதற்கான வேட்புமனுதாக்கல்கடந்த 19-ம்தேதி தொடங்கியது. முதல் 3 நாட்களில் சுயேச்சை வேட்பாளர்களும், தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரம் பெறாத கட்சிகளின் வேட்பாளர்களும் மட்டுமே மனு தாக்கல் செய்தனர். 22-ம் தேதி மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் (கன்னியாகுமரி), திமுக முதன்மைச் செயலாளர் டி.ஆர்.பாலு (ஸ்ரீபெரும்புதூர்), பாமக இளைஞரணித் தலைவர் அன்புமணி (தருமபுரி), தேமுதிக துணைச் செயலாளர் எல். ரவீந்திரநாத் குமார் (தேனி), மார்க்சிஸ்ட் வேட்பாளர் சு.வெங்கடேசன் (மதுரை), புதிய நீதிக் கட்சித் தலைவர் ஏ.சி.சண்முகம் (வேலூர்) உள்ளிட்ட முக்கிய வேட்பாளர்கள் பலரும் மனு தாக்கல் செய்தனர். 23, 24 (சனி, ஞாயிறு) விடுமுறை தினங்கள் என்பதால் வேட்புமனுக்கள் பெறப்படவில்லை.

இரண்டு நாள் விடுமுறைக்குப் பிறகு நேற்று வேட்புமனுக்கள் பெறப்பட்டன. மக்களவை துணைத் தலைவர் மு.தம்பிதுரை (கரூர்), தமிழக பாஜக தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் (தூத்துக்குடி), திமுக மகளிரணி செயலாளர் கனிமொழி (தூத்துக்குடி), விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் (சிதம்பரம்), புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி (தென்காசி), தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர்கள் சு.திருநாவுக்கரசர் (திருச்சி), ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் (தேனி), திமுக வேட்பாளர்கள் ஆ.ராசா (நீலகிரி), எஸ்.ஜெகத்ரட்சகன் (அரக்கோணம்), கதிர் ஆனந்த் (வேலூர்), தமிழச்சி தங்க பாண்டியன் (தென் சென்னை), கலாநிதி வீராசாமி (வட சென்னை), மதிமுக வேட்பாளர் அ.கணேசமூர்த்தி (ஈரோடு), இந்திய ஜனநாயக கட்சித் தலைவர் பாரிவேந்தர் (பெரம்பலூர்), மார்க்சிஸ்ட் வேட்பாளர் பி.ஆர்.நடராஜன் (கோவை), இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர் கே.சுப்பராயன் (திருப்பூர்), விசிக பொதுச்செயலாளர் டி.ரவிக்குமார் (விழுப்புரம்),

அதிமுக வேட்பாளர்கள் டாக்டர் வேணுகோபால் (திருவள்ளூர்), ராஜ்சத்யன் (மதுரை), காங்கிரஸ் வேட்பாளர்கள் எச்.வசந்தகுமார் (கன்னியாகுமரி), கார்த்தி சிதம்பரம் (சிவகங்கை), ஜோதிமணி (கரூர்), ... திரன் (ராமநாதபுரம்), மக்கள் நீதி மய்யம் வேட்பாளர் கமீலா நாசர் (மத்திய சென்னை) உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் நேற்று வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர். இதுவரை 83 பெண்கள், 2 மூன்றாம் பாலினத்தவர் உட்பட 608 பேர் மனு தாக்கல் செய்துள்ளனர்.

**பாஜக தலைவர் அமித்ஷா, காங்கிரஸ் தலைவர் ராகுல், பொதுச்செயலாளர் பிரியங்கா ஆகியோர் பிரச்சாரம் செய்ய உள்ளனர்.**

இடைத்தேர்தல் நடைபெறும் 18 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு அதிமுக, திமுக, அமமுக வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்தனர். முன்னாள் அமைச்சர் பாலகிருஷ்ண ரெட்டியின் மனைவி ஜோதி (ஓசூர்), திமுக வேட்பாளர்கள் செ.கிருஷ்ண குமார் (அரூர்), சிவலிங்கம் (எ) இலக்கியதாசன் (மானாமதுரை), ஆ.கிருஷ்ணசாமி (பூந்தமல்லி) உள்ளிட்டோர் நேற்று வேட்புமனு தாக்கல் செய்தனர். 18 பேரவைத் தொகுதிகளுக்கு நேற்றுவரை 38 பெண்கள் உட்பட 231 பேர் மனு அளித்துள்ளனர்.

வேட்புமனு தாக்கலுக்கு இன்று கடைசி நாளாகும். இன்று பிற்பகல்

---

பசுமையான சுற்றுச்சூழலுக்காக

# ராம்கோ சிமென்ட்ஸுக்கு தங்கப்பதக்கம்

**■ சென்னை**

ராம்கோ சிமென்ட்ஸ் நிறுவனம் சிறந்த பெரு நிறுவன கட்டுப்பாட்டுக்கான விருதையும், அதன் அரியலூர் ஆலைக்கு பசுமையான சுற்றுச்சூழலுக்கான தங்கப் பதக்கமும் கிடைத்துள்ளது.

இதுகுறித்து அந்நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சர்வதேச உற்பத்தி ஆராய்ச்சி நிறுவனம் பசுமையான சுற்றுச் சூழல் நிலவும் இந்திய நிறுவனங்கள் குறித்த ஆராய்ச்சியை மேற்கொண்டது. இதில் மொத்தம் 300 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அவற்றில் 58 ஆலைகள் மட்டும் ஆய்வுக்காக தேர்வு செய்யப்பட்டன.



▲ சென்னையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் முருகப்பா குழும முன்னாள் செயல் தலைவர் எ.வேலய்யன், விஞ்ஞானியும், இஸ்ரோ முன்னாள் இயக்குநருமான மயில்சாமி அண்ணாதுரை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**691.7 புள்ளிகள்**

அதில் தென்னிந்தியாவில் இருந்து ராம்கோ சிமென்ட்ஸ் நிறுவனத்தின் அரியலூர் ஆலை மட்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம் 800 புள்ளிகளில் 691.7 புள்ளிகளைப் பெற்று தங்கப் பதக்கம் வென்றுள்ளது.

ராம்கோ சிமென்ட்ஸின் ஆர்.ஆர்.நகர், ஜெயந்திபுரம், அலத்தியூர் ஆகிய ஆலைகள் முறையே 667.3, 662.5, 656.4 புள்ளிகளைப் பெற்று வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளன.

**சென்னையில் விழா**

விருது வழங்கும் விழா சென்னையில் நடைபெற்றது. முருகப்பா குழும முன்னாள் செயல் தலைவர் எ.வெள்ளையன், விஞ்ஞானியும், இஸ்ரோ முன்னாள் இயக்குநருமான மயில்சாமி அண்ணாதுரை ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

தேர்தல் பணிக்கு வராத

# அரசு ஊழியர்

● தலைமை தேர்தல் அதி

**■ சென்னை**

தமிழகம் முழுவதும் ஞாயிற்றுக் கிழமை வரை ரூ.33 கோடியே 46 லட்சம் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு தெரிவித்தார்.

இதுதொடர்பாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு கூறியதாவது: தமிழகம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமை வரை ரூ.33 கோடியே 46 லட்சம் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதில், ரூ.4 கோடியே 45 லட்சம் ஏற்கெனவே திருப்பியளிக்கப்பட்டுள்ளது. வெள்ளி இதுவரை 317 கிலோ பறிமுதலாகியுள்ளது.

நாகையில் அதிமுகவினரும் கடலூரில் திமுகவினரும் அளித்ததாக தலா 100 பெட்ரோல் டோக்கன்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார். தொடர்ந்து செய்தியாளர்கள் கேள்விகளுக்கு அவர் அளித்த

---

# ராகுல் காந்தியின் முடிவை ஏற்க வேண்டும்

● கே.எஸ்.அழகிரி வேண்டுகோள்

**■ சென்னை**

சிவகங்கை தொகுதி வேட்பாளராக கார்த்தி சிதம்பரத்தை தேர்வு செய்த காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியின் முடிவை முன்னாள் மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் ஏற்க வேண்டும் என அக்கட்சியின் மாநிலத் தலைவர்



---

பதிவு செய்யப்படாத கட்சி என்பதால்

# அமமுகவுக்கு குக்கர் சின்னம் ஒது

● உச்ச நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் திட்டவட்

டி.செல்வகுமார்

**■ புதுடெல்லி**

பதிவு செய்யப்படாத கட்சி என்பதால் அமமுகவுக்கு பொதுச் சின்னமான குக்கர் சின்னம் ஒதுக்க முடியாது என்று தேர்தல் ஆணையம் உறுதிபட தெரிவித்துள்ளது.

சென்னை ... நீதிமன்ற உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்தது.

இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தினகரன் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார். அதில், ‘இரட்டை இலை சின்னத்தை ஓ.பன்னீர்செல்வம், பழனிசாமி தரப்புக்கு ஒதுக்கி டெல்லி உயர் நீதிமன்றம் பிறப்பிக்க